**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம்**

**திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 85** **நாள் : 08.10.2021**

## என் பாசத்துக்குரிய அருட்சகோதரிகளே!

## *நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்!*

**இந்து மாதம் செபமாலை மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம்.**

செபமாலை செபிக்கும் போது ஒவ்வொரு முறையும்
பெரும் ஆசீர்வாதங்கள் புதுமைகள் நடப்பதாக
நாம் பல உண்மை நிகழ்வுகளில் கேள்விப்படுகிறோம்.
பல சமயங்களில் அந்த உண்மை நிகழ்வுகள்
நமக்கு ஜோடிக்கப்பட்ட கதைகளாகக் கூடத் தோன்றும்.
**அதனால் செபமாலையை அறிவியல்,**
**உளவியல் ரீதியாக நாம் புரிந்துகொள்வதும்**
**இளம் தலைமுறையினரைப் புரியவைப்பதும் அவசியம்.**

செபமாலை மந்திரங்களால் ஆன செபம்.
‘**மந்திரம்**’ என்பதற்கு என்ன அர்த்தம் என்றால்
நடக்க இயலாதவைகளை நடக்கச் செய்வதும்
இயற்கைக்கும் அறிவியலுக்கும் அப்பாற்பட்டவைகளையும்
நிகழ்த்திக் காட்டுவதுமாகும்.

ஒரே செபம் திரும்பத்திரும்பச் சொல்லப்படுவதால்
அவைகளின் வார்த்தைகள் அர்த்தங்களைக் கடந்து
ஆழ்மன ஆற்றலை உசுப்பிவிடுகின்றன.
இந்த ஆற்றல்கள் அதிசயங்களைப் பிறப்பிக்கும் வல்லமை படைத்தவை.
அதனால் தான் செபமாலை வல்லமை படைத்த செபமாகிறது.
செபமாலை முற்றிலும் நேர்மறை ஆற்றலைப் பிரசவிக்கிறது.
அன்றாடம் ‘**அருள் நிறைந்த மரியே**’ என
அன்னை மரியாவை வாழ்த்தும்போது
நாமும் அருள்பெற்றவராக நமக்கு நாமே சொல்லிக்கொள்கிறோம்.

உளவியல் ரீதியாக இது ஒரு **Auto Suggestion.**
இவ்வாறு அருள் நிறைந்தவா் என அன்னையை வாழத்த
நாமும் அருள் பெற்றவராக உருமாறுகிறோம்.
ஒவ்வொரு அருள்நிறை செபத்திலும்
பெண்களுக்குள் ஆசீா் பெற்றவா் என்று
சொல்லச் சொல்ல நாமும் ஆசீா்பெற்றவா்களாக உணா்கிறோம்.
இதனால் நம்மை எதிா்கொள்ளும் தீவினைகள்
நம்மை அணுக இயலாத விதமாக
ஆசீா்வாதத்தால் நிரப்பப்படுகிறோம்.

அன்னை மரியாளை '**உம் வயிற்றின் கனியும் ஆசீா் பெற்றவா்**' என்கிறோம்.
நம் கனிகள் என்பவை நம் பணிகள், நம் செயல்கள்.
இவ்வாறு நாம் செய்யும் பணிகளும் செயல்களும்
ஆசீா் பெற்றவையாய் மாறுகின்றன.
அப்படியெனில் தோல்விகள் நம்மை எப்படி மேற்கொள்ள இயலும்?
நம்மில் பலா் நினைக்கலாம் எத்தனை முறை செபமாலை செபிக்கிறோம்
இன்னும் ஏன் நாம் அருள் நிறைந்தவராக மாறவில்லை?
ஆசீா் பெற்றவராக உருவாகவில்லை?
நம் பணிகள் அனைத்தும் ஆசீா்வாதமானவையாய் மிளிரவில்லை?
**நாம் எப்படி செபமாலை செபிக்கிறோம் என்பதைப் பொறுத்தே**
**இந்த அதிசயங்கள் நிகழ வாய்ப்புண்டு.**

அன்னை மரியாவை அருள் நிறைந்தவரே
என வாயினால் உரக்கக் கத்தி உரைக்கும்போது
நம் மனம் அதில் வேரூன்றி இருக்கிறதா?
என ஆய்வு செய்ய வேண்டும்.
பல சமயங்களில் எதையோ யோசித்துக் கொண்டு
கடமைக்காக நாம் செபமாலை செபிப்பதில்லையா?
நேரமாகும் என மூச்சுவிடாமல் சொல்லப்படும் செபமாலை,
சீக்கிரம் முடிக்க வேண்டுமென ஆங்கிலத்தில் சொல்லப்படும் செபமாலை,
அவசரகதியில் வேடிக்கை பாா்த்துக்கொண்டு சொல்லப்படும் செபமாலை
இம்மக்கள் உதட்டினால் என்னை அழைக்கிறாா்கள்
இவா்கள் உள்ளமோ வெகுதொலைவில் இருக்கிறது
என்ற வாா்த்தைகளை உண்மையாக்கிவிடுகின்றன.

மொத்தத்தில் அா்த்தமில்லாமல் நாம் சொன்ன செபமாலைகள்
நம்மை இன்னும் அருள்நிறைந்தவராக மாற்றவில்லை.

**நாம் அருள் நிறைந்தவராக மாற,**
**ஆசீர்வாதமாக நம் வாழ்வு மாற்றப்பட செபிப்போம்.**
செபமாலையின் பொருள் உணர்ந்து
அருள் பெற்றவராய் வாழ்வதே
இன்றைய அத்தியாவசியத் தேவை.

***சவால்களை சந்திக்க அருள் தேவை:***

நாம் வாழும் சமூகம்
புதிய சவால்களைக் கட்டமைத்து அனுப்பிவைக்கிறது.
இந்த சவால்களை சந்திக்க நமக்கு
நேர்மறை ஆற்றல் இருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.
உடல் ரீதியாகவும் மனரீதியாகவும்
நம்மை சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ளவும்,
துச்சமென அவற்றைக் கடந்து செல்லவும்
அருள் நிறைந்தவராய் இருந்தால் மட்டுமே இயலும்.
அல்லது போரில் தோற்றுப் பின்வாங்குவோம்.
மன உறுதியோடு பயணிக்க
அருள் பெற்றவராய் உருமாறுவோம்.
செபமாலை வழி அருள் பெறுவோம்.

***ஆற்றல் விரயம் தவிர்க்கப்பட அருள் வேண்டும்:***

பெரும்பாலும் நம் ஆற்றல்கள் அடுத்தவரின் வினைக்கு
எதிர்வினையாற்றுவதிலே விரயமாகிறது.
நம் பயணம் யாராலும் தடுத்து நிறுத்த இயலாத
பயணமாக இருக்க வேண்டுமேயன்றி
அவசியமற்றவைகளுக்குப் பதில்சொல்வதாக அமைந்துவிடக்கூடாது.
சூரியனின் பயணத்தை சிற்றெரும்பின் கூட்டமா தடுத்துவிட முடியும்?
அல்லது ஓடும் ஆற்றின் நீரை
ஆட்டுமந்தையின் கழிவா அழுக்குப்படுத்திவிட முடியும்?
இந்த புரிதல் இல்லாததால்தான்
ஆங்காங்கே நம் ஆற்றல்களை விரயமாக்குகிறோம்.
தேவையானது ஒன்றே!

மனம் சுத்தமாக, கொள்கை தெளிவாக,
இலட்சியம் சுயநலக் கலப்பில்லாததாக இருந்தால் போதும்.
இதற்கு இடைவிடாத சுயசுத்திகரிப்பும் சுயதரிசனமும் தேவை.

***வாழ்க்கையைப் புரிந்து வாழ அருள் அவசியம்:***

பெரும்பாலும் நம் செயல்பாடுகளில் பல
நாம் இன்னும் வாழ்வைப் புரிந்துகொள்ளவேயில்லை எனக் காட்டுகிறது.
பலரது வாழ்க்கை முரண்பாடுகளின் தொகுப்பாக இருக்கிறது.
வேறு சிலர் தோல்விகளின் கூடாரமாக வாழ்வை மாற்றியிருக்கிறார்கள்.
இன்னும் பலர் வாழ்வை
கவலைகளின் கேந்திரமாகத் தொகுத்திருக்கிறார்கள்.
சிலரோ குறைபாடுகள், குற்றங்கள், புலம்பல்கள்,
அதிருப்திகள், அழுகைகளால் வாழ்வைக் கட்டமைத்திருக்கிறார்கள்.
மிக மிகச் சொற்பப் பேர்தான் வாழக்கையை
அழகிய பூங்காவாக, நட்சத்திர மேகமாக,
கவிதைத் தொகுப்பாக, வெற்றிப் பரணியாக,
புல்லாங்குழல் இசையாக, இலட்சியப்பயணமாக,
திருயாத்திரையாக வடிவமைத்திருக்கிறார்கள்.

**இவர்கள்தான் அருள் நிறையப் பெற்றவர்கள்.**
**அந்த அருள் பெற்றவராய் வளர**
**அன்றாடம் செபிப்போம் அருள் நிறை மந்திரத்தை.**

**<u>சபைத் தலைமை அன்னையின் அக்டோபர் மாதப் பணித்திட்டம்</u>**

| | | |
|---|---|---|
| 01 - 05 | - | Office work - Generalate |
| 06 | - | Personal Prayer Day |
| 07 | - | Council Meeting - Generalate |
| 08 | - | Office work - Generalate |
| 09 | - | Travel to Thanjavur |
| 10 | - | Memorial Mass for Sr. Maria Placida Viel & Sr. Mary Josetta - Pookara Street |
| 11 - 13 | - | Spiritual Renewal |
| 14 - 17 | - | Office work - Generalate |
| 18 | - | Meeting - LEGAL CELL |
| 19 | - | Meeting – TANCEAN |
| 20 | - | Golden Jubilee - Pookara Street |

| | | |
|---|---|---|
| 21 | - | Council Meeting - Generalate |
| 22 | - | Office work - Generalate |
| 23 | - | Meeting on Synod - Pastoral Center |
| 24 - 25 | - | Preparation for the Inauguration of the College – Salem |
| 26 | - | Inauguration of the College – Salem |
| 27 | - | Travel to Chennai |
| 28 - 29 | - | Class for Silver Jubilee Sisters - Generalate |
| 30 | - | Catechetical Commission Meet - Trichy |
| 31 | - | Preparing the Circular to announce the **GENERAL CHAPTER** |

அருள் நிறை மந்திரத்தை செபிப்பதால்
அருள் மிகப் பெற்றவராக வாழ
அருள் நிறை மரியாள் அருள் செய்வாளாக!

அக ஒளிப்பயணத்தில் தோழமையுடன்
Sr. Maria Philomi FBS
சபைத் தலைமை அன்னை